# கலாதீபம்

කලාදීබම් KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 01.08.2023 – 31.08.2023 தீபம் 15


# இலங்கையில் உள்ள கலாசாலைகளில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையே முதன்மையானது

## ஆசிரியர் கல்விக்கான பிரதம ஆணையாளர் புகழாரம்

இலங்கையிலுள்ள ஆசிரியர் கலாசாலைகளுள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையே முதலிடத்திலுள்ள கலாசாலை ஆகும். இவ்வாறு புகழாரம் சூட்டினார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இசுறுபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்குரிய பிரதம ஆணையாளர் டாக்ரர் கே.எ.டி.புண்ணியதாச.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால நிகழ்வுகளின் முக்கிய அங்கமான நூற்றாண்டு நினைவிடத் திறப்பு வைபவம் 09.08.2023 காலை 9 மணிக்கு கலாசாலையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆணையாளர் இலங்கையின் ஆசிரியர் கல்வியின் வரலாறு பற்றிக் குறிப்பிட்டதுடன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் தொன்மை பற்றியும் விதந்துரைத்தார். அத்துடன் தமிழ் சமூகத்திற்காக ஆறுமுக நாவலர் சேர் பொன் இராமநாதனை அரசியலுக்கு அழைத்து வந்தமையையும் சேர் பொன் இராமநாதன் பல கொடைகளை மேற் கொண்டமையையும் சுட்டிக் காட்டிப் பேசினார்.

பிரதம ஆணையாளர் மற்றும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஆசிரியர் கல்விப் பணிப்பாளர் திருமதி டபிள்யூ.ஜீ.எஸ்.பி.எம்.ஸ்ரீமா தசநாயக்கா அவர்களும் நினைவுக் கல்லினை திரை நீக்கம் செய்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து ரதிலட்சுமி மண்டபத்தில் நிகழ்வுகள் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி நடைபெற்றன..

திருக்குறள் வழிபாட்டினை தொடர்ந்து வரவேற்புரையினை பிரதி அதிபர் திரு க.செந்தில்குமரன் அவர்களும் தலைமை உரையினை அதிபர் ச.லலீசன் அவர்களும் ஆற்றினர். தொடர்ந்து அதிதிகள் பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.











## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகக்கழகம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்
தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்
திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**இணை ஆசிரியர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

**பட ஒருங்கிணைப்பு**
தங்கன் இன்பதாஸ்
ஆசிரியமாணவன் - உடற்கல்வி (2021/2022)

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com

# சினேகபூர்வ உதைபந்தாட்டம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை VS வடமராட்சி உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்க (Vadamaradchi Soccer Masters Association Team) அணிக்கும் இடையே நடைபெற்ற சினேகபூர்வ உதை பந்தாட்ட போட்டி 03.08.2023 அன்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அணி வெற்றி பெற்றுக்கொண்டது.









# கலாதீபம்

කලාදීපම KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

### ஆசிரியர்களும் ஆன்மீக நாட்டம் கொள்ள வேண்டும்

இது திருவிழாக்களின் காலம் என்று சொல்லுமளவிற்கு தற்போது நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழா, செல்வ சந்நிதி ஆலய திருவிழா, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் திருவிழா, மடு அன்னையின் திருவிழா என்பன சமகாலத்தில் நடைபெற்று நிறைவடைந்துள்ளன.

திருவிழாக்கள் மக்கள் மனதில் புத்தெழிச்சியையும் ஆன்மீக நாட்டத்தையும் உருவாகக வல்லவை. எமது மொழி, சமயம், பண்பாடு பற்றிய விழிப்புணர்வு திருவிழாக்களின் ஊடாகவே ஏற்படுத்தப்படுகிறது. திருவிழாக்கறுக்கு செல்லும்போது கலாசார உடை அணிந்து பங்கேற்பது மிகவும் பொருத்தமானது. இன்று எமது புலனை வெவ்வேறு வழிகளில் திசை திருப்பவல்ல சாதனங்கள் மற்றும் செயற்பாடுகள் தாராளமாகவே இடம்பெறுகின்றன. இந்த வலைக்குள் இளைய சமூகத்தினர் பலர் அகப்பட்டிருப்பது எமது வாழ்வியலுக்கு உசிதமானது அல்ல.

ஆசிரியர்களாகிய நாம் பண்பாடு மற்றும் கலாசாரங்களை வளர்ப்பதிலும் காப்பதிலும் முன்னின்று உழைக்க வேண்டியவர்கள். இளைய தலைமுறையினரை வழிப்படுத்த வேண்டியவர்கள். அதற்குரிய தகுதிப்பாட்டை சமூக அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முதலில் ஆசிரியர்கள் இந்த வழிமுறையைப் பின்பற்ற வேண்டும். கோவிலுக்கு செல்லும்போது அதற்குரிய கோல உடையுடன் செல்லுதல் கோவில் வழிபாட்டு நியமங்களை சரியாக மேற்கொள்ளல் இவ்வாறான செயற்கிரமங்களை ஆசிரியர்கள் சரியாக மேற்கொள்ளும்போதுதான் அவர்களைப் பின்பற்றுகின்ற மாணவர்களும் அந்த வழிமுறையைப் பின்பற்றுவார்கள். ஆடைக் கலாசாரத்தைப் பொறுத்தவரையில் இன்று இளம் ஆசிரியர்கள் கூட சமய நெறிமுறைக்கு ஒவ்வாத வகையில் ஆடைகளை அணிந்து காட்சி தருவது வேதனைக்குரியது. இந்த நிலைமை மாறவேண்டும். இது பற்றிய விழிப்புணர்வு ஏற்படவேண்டும். சமயம் என்பது வெறுமனே பரீட்சைக்காக படிக்கும் பாடமாக இருக்கக்கூடாது. அது ஒரு வாழ்வியலாக மலர்ச்சி பெறவேண்டும். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் இரண்டு தளங்களில் பண்பாட்டை காப்பதில் பங்கு வகிக்கின்றமை பற்றி இங்கு முன்வைத்தோம். தனது தளத்திலும் தனது மாணவர்களை வழிப்படுத்தும் தளத்திலும் ஆசிரியர் மிகக் கவனமாக செயற்பட வெண்டியவராகிறார். பண்பாட்டுக் கையளிப்பு என்பது காலம் நமக்கிட்ட பணி ஆசிரியர்கள் பொறுப்புணர்ந்து இந்த விடயத்தில் செயற்படவேண்டும்.

அதிபர்

## ஈழத்து இசைமரபின் மற்றுமொரு இசை ஆளுமை சங்கீதபூஷணம் திரு. செ.குமாரசாமி அவர்கள் இறையடி சேர்ந்தார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபர் சங்கீத பூஷணம் செல்லத்துரை குமாரசாமி (SLEAS) (வயது 73) 16.08.2023 புதன்கிழமை காலமானார்.

10.01.1951 இல் பிறந்த இவர் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் இசைத்துறை பட்டதாரி ஆவார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இசைத்துறை விரிவுரையாளராகவும் பிரதி அதிபராகவும் சேவையாற்றினார்.

**"பூத்த கொடி பூக்கள் இன்றி தவிக்கின்றது"** என்ற எங்கள் மண்ணின் திரைப்படப் பாடல் இவர் பாடிய பிரபல பாடல் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய கலாசாலை சமூகத்தின் சார்பில் பிரார்த்திக்கின்றோம்.



## ஆசிரியர் கலாசாலைகளுக்கான இறுதிப்பரீட்சை

### 14.08.2023 – 20.08.2023

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்வி பயின்ற 2020/2021 ஆம் அணியினருக்கான இறுதிப் பரீட்சை 14.08.2023 தொடக்கம் 20.08.2023 வரை நடைபெற்றது. இப்பரீட்சைக்கு 179 ஆசிரிய மாணவர்கள் முதல் தடவையாகவும் கடந்த பரீட்சையில் நூன சித்தி பெற்ற 2019/2020—172, 2018/2019—04 ஆசிரிய மாணவர்களும் இப்பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். இவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளும் ஒருங்கே இடம்பெற்றன.

# News in Brief - Month of August

**02.08.2023**

**Wednesday Assembly**

It was held on Wednesday 02.08.2023 at Rathilakshmi Hall under the leadership of Mr. S. Laleesan, started at 8:30 am. The event was conducted by second year Physical Education B course teacher trainee. mrs. Elizabeth Kodbarina Kenny.

Guest speaker Mr.C Nagendraraja -Principal (Class I) Ottisuttan Maha Vidyalayam .His speech was based on his college time experience .

Mr. Na Ananthasayan who delivered the introductory speech. Mr E. Rajagokulan, second year Physical Education B teacher trainee, also addressed the topic of Drug Abuse.

**09.08.2023**

**Inauguration of Centenary Memorial**

This event took place on Wednesday at 9 am under the leadership of the principal of the college, S. Laleesan. The event was graced by many officials of Teacher Education of the Ministry of Education. Isurupaya.

The Chief Guest of the event Chief Commissioner (Teacher Education) Dr. K.A.D Punnyadasa Ministry of Education. Isurupaya and Director of Teacher Education (Teacher Education Administration) Mrs. W.G.S.P.M Srima Dasanayaka Ministry of Education. Isurupaya as guests of honour Mr. S Paramanantham, President of Jaffna National College of Education and Ms Suvarana Navaratnam Founder Navamangai Nivasam Charity & Director of Education (Rtd) TEA, MOE. Isurupaya .

The Northern Province Director of Education, Mr John Quintus, also attended the event .Former Principals Mr. V.Kanapathipillai Mr. V. Karunalingam and Managers of all teacher centers in Northern Province were also presented.

**11.08.2023**

**Inauguration of Smart Board Opening Ceremony**

It was held on 11.08.2023 at 9 am under the leadership of Mr. S. Laleesan, Principal of the College.Branch, Ministry of Education, Isurupaya was the chief guest on the occasion.

As special guests, Mrs. Kandiah Parashakti, a 95-year-old Alumni of KTC 1952/1954 , and The former Project Coordinator NSBS, MOE, Isurupaya, Mr. Karai Kandiah Pathmananthan As a Guest of Honour Coordinator , IMHO, Srilanka & Rtd. Zonal Director of Education Mr S. Krishnakumar were present this occasion.

**16.08.2023**

Former vice Principal of Kopay Teachers' College "Sangeetha Pooshanam" **Shellathurai Kumaraswamy** (SLEAS) (Age 73) passed away on Wednesday 16.08.2023.

It is also worth noting that the famous song sung by him is the movie song of our land called **"Pootha kodi pookal indri thavikkindrana"**

On behalf of the college community, we pray for his soul to rest in peace.

**14.08.2023**

**Finial Examination**

The final examination for the 2020/2021 batch students of Kopay Teachers College was held from 14.08.2023 to 20.08.2023. 2020/2021—179, 2019/2020—172, 2018/2019—04 Total—355 teacher trainees sat for this examination.

**31.08.2023**

**Assembly**

It was held on Thursday 31.08.2023 at Rathilakshmi Hall under the leadership of Mr. S. Laleesan, The assembly was started at 8:30 am. The event was conducted by second year English course teacher trainee Mrs. Muhammad Razmi Rusania was participated as the mistress of ceremony.

Mr.Pon Sri Vamathevan, write of the Tamil Teachers' Anthem and former teacher trainee of KTC (1978/1979) was participated as the Guest speaker. Mr. P.Satkunanathan delivered the introductory speech about the Chief Guest. Mr S. Karitharan Second year English teacher trainee Delivered the student speech on the Topic of landing of the Chandrayaan - 3

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் திறன்பலகை திறப்புவிழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக IMHO மற்றும் Ratnam foundation நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட திறன் பலகை வகுப்பறைத் திறப்பு விழா இன்று 11.08.2023 காலை 9 மணிக்கு கலாசாலை அதிபர் திரு ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இசுறுபாய கல்வி அமைச்சின் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான பணிப்பாளர் திருமதி பி.ஜீ.ஐ களனி ஹேமாலி அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கல்வி அமைச்சின் முன்னாள் செயல்திட்டப் பணிப்பாளர் காரை கந்தையா பத்மானந்தன் அவர்களும் கலாசாலையின் 1952/1953 காலப் பகுதியில் கல்வி பயின்ற 95 வயதுடைய முன்னாள் ஆசிரியை திருமதி கந்தையா பராசக்தி அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

திறன் வகுப்பறையை திறந்தமையைத் தொடர்ந்து உடற் கல்வி ஆசிரிய மாணவி திருமதி ஸ்ரீ ஷோபனா சிவரூபன் திறன் பலகையில் e-class யைப் பயன்படுத்தி கற்பித்தல் முறை ஒன்றினை மேற்கொண்டு காட்டினார்.

அதனைத் தொடர்ந்து ரதி லட்சுமி மண்டபத்தில் விருந்தினர்கள் பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப் பட்டனர். திறன் பலகையை கலாசாலைக்காக உவந்தளித்த IMHO, ரட்ணம் பவுண்டேசன் அமெரிக்கா ஆகிய நிறுவனங்களுக்கும் இதற்குரிய இணைப்பினை மேற்கொண்ட அமெரிக்க பேராசிரியர் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் தவம் மற்றும் IMHO இணைப்பாளர் முன்னாள் வலயக் கல்வி பணிப்பாளர் திரு சு. கிருஷ்ணகுமார் ஆகியோருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.












# தேசிய கல்வியியல் கல்லூரிக்கான பணிப்பாளர் திருமதி பி.ஜீ.ஜ களனி ஹேமாலி ஆசிரியர் கலாசாலையில் ஆற்றிய உரை

**எட்டு ஆசிரியர் கலாசாலைகளில் முதலிடத்தில் இருப்பது கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆகும் இது பாராட்டத்தக்கது. பாராட்டத்தக்க வகையிலும் திகழ்கிறது.**

நீங்கள் உங்கள் கலாசாலையில் நூறு வருடங்களை பூர்த்தி செய்து இருக்கிறீர்கள் நான் உங்கள் கலாசாலைக்கு வருகை தந்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.
நேற்று நீங்கள் என்னை உங்கள் கலாசாலைக்கு அழைத்து இருந்தீர்கள் தவிர்க்க இயலாத காரணங்களால் என்னால் வருகை தர முடியவில்லை. இன்று உங்கள் கலாசாலையின் திறன் வகுப்பறையை நான் திறந்து வைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சி. யாழ்ப்பாண கல்வியைக் கல்லூரிக்கும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கும் இடையிலான இந்த உறவு மிகவும் பாராட்டத்தக்கது. நான் வியப்படைகின்றேன்.

இந்த இரு நிறுவனங்களுக்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வு. ஒற்றுமை. உறவு நிலைக்க வேண்டும் இதற்காக எனது பாராட்டுகளையும் நன்றி உணர்வுகளையும் தெரிவிக்கின்றேன்.

வாழ்க்கையில் எல்லாவற்றிக்கும் சரியான தொடர்பாடலும் சிறந்த புரிந்துணர்வும் இருக்க வேண்டும். ஏனைய எட்டு ஆசிரியர் கலாசாலைகளை விட முதலிடத்தில் இருப்பது பாராட்டத்தக்கது. பாராட்டத்தக்க வகையிலும் திகழ்கிறது. இருபதாம் நூற்றாண்டில்நீங்கள் அறிவை இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும் இற்றைப்படுத்தல் இல்லாவிடில் இக்கால சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ முடியாது ஆசிரியர் கலாசாலை சமூகத்திற்கு இனிய பங்களிப்பை வழங்குகின்றது ஆகையால் ஆசிரியர்களாகிய நீங்கள் இக்கலாசாலையில் இருந்து உச்சகட்ட பயனையும் அறிவையும் பெற்றுக் கொள்ள வேண்டும் அதற்கு உங்களுக்கு விருப்பமும் அதற்காக அர்ப்பணிப்பும் இருக்க வேண்டும்.

**ஆங்கில உரையின் தமிழாக்கம்**
**திருமதி எமில்டா உஷா துஷ்யானந்தன்**
**2ம் வருட ஆங்கிலநெறி**










# புதன் 02.08.2023 ஒன்றுகூடலில் அதிதி பேச்சாளர் திரு சி.நாகேந்திரராஜா அதிபர்(தரம் 1) மு/ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயம்~ கலந்து சிறப்பித்தார்

**உயர்ந்த பல கல்விச் சிந்தனைகளை உள்ளத்தனையது உயர்வாய் தந்த உரை**

கலாசாலையில் முன்னெடுக்கப்பட்டு வரும் புதன்கிழமை ஒன்று கூடல் வரிசையில் 02.07.2023 அன்று எமது கலாசாலையின் 98/99 ஆம் அணி பழைய மாணவரும் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபருமாகிய சிம்மக்குரலோன் திரு.சி.நாகேந்திரராசா அவர்கள் உள்ளத்தனையது உயர்வு என்ற தொனிப்பொருளில் கலாசாலை குறித்த தனது அனுபவங்களையும் கல்விப்புலம் சார்ந்து பல அறிவுரைகளையும் தனது உரையில் எடுத்துரைத்தார். முன்னதாக போதைப்பொருள் பாவனை பற்றிய விழிப்புணர்வு உரையை உடற்கல்வி ஆசிரிய மாணவன் ராஜகோகுலன் அவர்கள் வழங்கினார். அதிதி பற்றிய அறிமுகவுரையை எமது கலாசாலையின் கணிதபாட விரிவுரையாளர; திரு. ந.அனந்தசயனன் அவர்கள் வழங்கினார்.

தமிழ்த் தாயினதும் கலாசாலைத் தாயினதும் பாதங்களைப் பணிந்து தன் உரையை நாகேந்திரராசா அவர்கள் ஆரம்பித்தார். பின்னர் நூற்றாண்டு காணும் கலாசாலைதனை தன் ஆற்றல் மிக்க கவி வரிகளினால் வாழ்த்தினார். பின்னர; 1998/99 காலப்பகுதியில் பல்வேறுபட்ட நெருக்கடிச் சூழலுக்குள் தாம் கப்பல் மூலம் இங்கு வந்து தங்கி கற்ற கலாசாலை நினைவுகளை மீட்டிப் பேசினார். வித்தியானந்தா செல்லாமல் ஒட்டுசுட்டானிலேயே உயர்தரம் படித்த தன் வரலாற்றை கூறியதுடன் கல்வியியல் கல்லூரிக்கும் ஆசிரிய கலாசாலைக்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக்கூறி கல்வி என்பது பரீட்சை நோக்குடையது மட்டுமல்ல. உண்மையில் அது நல்ல மனிதர்களை உருவாக்க வேண்டும். அவ்வகையில் ஆசிரியர்களாகிய எமக்கு மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. கற்றபடி வாழுதலும் ஒழுகுதலும் முக்கியம் என்பதை பல திருக்குறள் கருத்துக்கள் வழி எடுத்துக் கூறியதுடன் நெருக்கடி மிக்க அந்தக் காலத்தில் நாம் கல்வியில் சாதனைகள் படைத்தோம். ஆனால் இன்று வசதி வாய்ப்புக்கள் இருந்தும் அந்தச் சாதனையை தவற விடுகின்றோம் எனக்கூறி உள்ளத்தனையது உயர்வு என்பதை நாம் மறந்துவிட்டதன் விளைவே இது என்று கூறியதுடன் அது பற்றிய பல்வேறுபட்ட விடயங்களை எடுத்துக் கூறினார் அத்துடன் இன்று உயர்தர, பல்கலைக்கழக மாணவர்கள் தற்கொலை செய்யும் நிலையை எடுத்துக்கூறி இவற்றை தடுத்து எமது சமூகத்தை காக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் ஆசிரியர்களுக்கும் கல்விச் சமூகத்திற்கும் உரியது என்று கூறி தன்னை அழைத்தமைக்கு நன்றி கூறி தன் உரையை நிறைவு செய்தார்.











# மூத்த ஆசிரிய மாணவி (1952/1953) திருமதி கந்தையா பராசக்தி அவர்கள் ஆற்றிய உரை

**கலாசாலையின் அன்றைய அதிபர்கள் குடைபிடிக்க வகுப்பு மேற்பார்வை வலம் வருவார்களாம். கோப்பாய் அரசினர் காலசாலை என்று தமக்கு, ஏனையவர்களை விட சற்று பெருமை அதிகமாக இருந்ததாம். இப்படிப் பல சுவாரசியமான தகவல்களைப் பகிர்கிறார் பரா ரீச்சர்.**

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 11.08.2023 ஆம் திகதி நடைபெற்ற ஒன்று கூடல் நிகழ்விலும் திறன் வகுப்பறையின் தொடுதிரைத்திறப்பு விழாவிலும் கலாசாலையில் 1952/1953 ஆம் கல்வியாண்டில் கற்ற 95 வயதான ஆசிரியர் பராசக்தி கந்தையா (காரைநகர்) காரை சுந்தரமூர்த்தி வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியர் அவர்களும் அவரது மகனான கல்வியமைச்சின் திட்டப் பணிப்பாளரும் எமது கலாசாலையின் மீள் புனரமைப்பு மற்றும் விடுதி அமைப்பு என்பவற்றிற்கு உதவியவருமாகிய நாடறிந்த காரை கந்தையா பத்மானந்தன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

தொடங்கலாமா? எனக் கேட்டு உரையை தொடங்கிய அவர் தான் கற்றது 1952 என தன் காலத்தை நினைவுபடுத்தியதுடன் பின்னர் தான் கற்ற கால அதிபர் முருகேசு அம்மாவை நினைவுபடுத்தினார். அத்துடன் கந்தப்பு, ரதிலட்சுமி ஆகிய விரிவுரையாளர்களையும் நினைவு படுத்தினார். அருமையான பள்ளிக்கூடம், நல்ல சந்தோசமாய் ஒற்றுமையையாய் நாங்கள் படித்த பள்ளிக்கூடம் எனக் கலாசாலையை விளித்துப் பேசிய அவர் கற்பித்தல் பயிற்சி விளையாட்டுப்போட்டி அனுபவங்களையும் எடுத்துக் கூறினார். வெளிமாவட்ட கலாசாலைகள் வந்து தங்கிச் செல்வது, எல்லாக் கலாசாலைகளுக்கும் இடையிலான விளையாட்டுப் போட்டியில் அநேக போட்டிகளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையே வெல்வது, மாணவ முதல்வரே நேரசூசி தயாரிப்பது, வெள்ளிக்கிழமைகளில் சுகாதாரம் சொற்பொழிவு நடப்பது, தன்னோடு 56 பேர் படித்தது, படிக்கும்போது நடந்த சுவையான சம்பவங்கள் எனப் பல விடயங்களை நகைச்சுவையோடு எடுத்துரைத்தார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய திருவாளர் காரை கந்தையா பத்மானந்தன் அவர்கள் 1984 இல் காரைநகர் யாழ்ட்ரன் கல்லூரியில் கற்று பின்னர் நுவரெலியா தோட்டப்பாடசாலையில் ஆசிரிய நியமனம் பெற்றமை, அங்கு மூன்றாண்டு கற்பித்த பின்னர் மிகவும் கடுமையான போர்க்காலத்தில் கிளிநொச்சியில் கல்வி கற்பித்தமை, அதன் பின்னர; கல்வி அமைச்சின் திட்டப்பணிப்பாளராய் பதவி உயர்வு பெற்றமை எனப் பல்வேறுபட்ட அனுபவங்களை எடுத்துக்கூறி இன்றைய ஆசிரியர்கள் தமது வீட்டுக்குப் அருகேயே கற்பிக்க விரும்புகின்றனர். ஆனால் இத்தகைய வெளிமாவட்ட ஆசிரிய அனுபவங்களே தன்னை பன்மொழி ஆற்றல் மிக்கதாகவும் பல்துறை ஆற்றல் மிக்கவராகவும் வளர்த்தெடுத்தது என்பதைக் குறிப்பிட்டதுடன் எந்த ஒரு நெருக்கடியிலும் கடமையாற்றும் துணிவை, தலைமைத்துவ முகாமைத்துவ திறனை இத்தகைய வெளிமாவட்ட சேவைக்காலங்களே வழங்கின என்று கூறியதுடன் தன்னையும் தன் தாயாரையும் கலாசாலக்கு அழைத்து கௌரவித்தமைக்காக நன்றி தெரிவித்தார்.











# 31.08.2023 ஒன்றுகூடலில் அதிதி பேச்சாளர் திரு பொன் ஸ்ரீ வாமதேவன் ஓய்வுநிலை ஆசிரியர் கலந்து சிறப்பித்தார்

**சட்டத்துக்காக வேலை செய்வதை விடுத்து ஆசிரியத்துவத்திற்காக உழையுங்கள்**
**சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீ வாமதேவன் அறிவுரை**

31.8.2023 வியாழக்கிழமை காலை 8:30 மணிக்கு கலாசாலையில் ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் திரு ச.லலீசன் தலைமையில் ஒன்றுகூடல் இடம் பெற்றது. இதில் அதிதி பேச்சாளராக கலந்துகொண்ட ஆசிரியர் கீதத்தை இயற்றிய பெருமைக்குரியவரும் எமது கலாசாலையில் 1978/1979 காலப்பகுதியில் ஆசிரியர் பயிற்சியை பெற்றவருமான பொன் ஸ்ரீ வாமதேவன் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிரியத்துவத்தையும், ஆசிரியத் தொழிலையும் போற்றுவதாகவும், ஆசிரியர்களுக்கு பல்வேறுபட்ட வழி காட்டல்களை வழங்கும் வகையிலும் இவரது உரை அமைந்திருந்தது.

பல்துறைப்பட்ட அறிஞர்களை உருவாக்கும் உன்னத பணி ஆசிரியப் பணி என குறிப்பிட்ட அவர் பழைய காலத்தில் உபாத்தியார், சட்டம்பியார் என ஆசிரியர்கள் அழைக்கப்பட்டதையும் அவர்கள் சமூகப் பிணக்குகளை தீர்த்து வைக்கும் நல்ல தீர்ப்புகளை வழங்குபவர்களாக மதிக்கப்பட்டதையும் எடுத்துக் கூறினார். ஆனால் இன்று ஆசிரியர்கள் பெருகி உள்ள போதும் ஆசிரியர்தினம் கொண்டாடப்படும் போது ஆசிரியர்களுக்கான உண்மையான மதிப்பு உள்ளதா என கேள்வி எழுப்பியதுடன் ஆசிரியர் கௌரவத்தை நாங்கள் பேணிக்காக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இன்று மாணவரை ஆசிரியர் தண்டிக்க முடியாத மனித உரிமை நிலைகளை எடுத்துக் கூறியதுடன் ஆயினும் தம்மை நம்பி வந்துள்ள மாணவர்களுக்காக ஆசிரியர்கள் எவ்வாறு கடமையாற்ற வேண்டும். ஆசிரியர் - ஆசிரியர் நல்லுறவு அதிபர் - ஆசிரியர் நல்லுறவு என்பன பற்றி கூறியதுடன் ஆசிரியர் மாணவர்களுக்கு சரியான முறையில் தண்டனை வழங்க வேண்டும் என்பதனையும் குறிப்பிட்டதுடன் தமிழர்களாகிய எம்மை பொறுத்தவரையில் கல்வியே எமக்கு இருக்கின்ற ஒரு சிறந்த முதலீடு அதனை அறிவு, ஒழுக்கம் என்ற தளங்களில் சிதையாமல் காப்பதே எமது கடமை என்று கூறியதுடன் உயிர்களோடு பழகும் உன்னத பணி ஆசிரியத்துவம் என்பதையும் வலியுறுத்தினார். நிறைவாக **"மாணவனே காது கொடுத்து கேளுங்க உங்கள் வீணவாவை கொஞ்சம் தள்ளி வையுங்கள்"** என தொடங்கும் மாணவர்களுக்கான பல்வேறு அறிவுரைகளை கூறும் தான் இயற்றிய பாடல் ஒன்றை சிறப்பான முறையில் பாடி அனைவரையும் நெகிழ வைத்தார். நிறைவாக கலாசாலை அதிபர் அவர்கள் அவரது வருகைக்கு நன்றி தெரிவித்தார்

ஆங்கில நெறி இரண்டாம் வருடத்தினர் இந்நிகழ்வினை முன்னெடுத்தனர். தொகுப்பாளராக திருமதி. முஹமட் றஸ்மி றுசானியா செயற்பட்டார். பொன் ஸ்ரீ வாமதேவன் குறித்த அறிமுக உரையினை கலாசாலையின் மாணவர் மன்ற காப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளரும் ஆகிய பொ சற்குணநாதன் ஆற்றினார். திரு. சதாசிவம். கரிதரன் சந்திரயான் - 3 விண்கலம் நிலவில் தரையிறங்கியமை குறித்த உரையை வழங்கினார்.









# தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் செயற்கை நுண்ணறிவும்

**திரு ஸ்ரீ.ஸ்ரீசேதுபரன் - சிரேஸ்ட விரிவுரையாளர்**
**(SLIATE JAFFNA)**



தகவல் தொழிநுட்பத்தில் பல்வேறுபட்ட வளர்ச்சிப் ப.டிகள் தற்போது காணப்படுகின்றது. இந்த காலப்பகுதியில் காணப்படும் முக்கிய வளர்ச்சிகளாக

- செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligent)
- இயந்திர மனிதவியல் (Robotics)
- முகில் கணினியியல் (Cloud Computing),
- குவாண்டம் கணினியல் (Quantum Computing),
- மெய்நிகர் செயற்பாடு (Virtual Reality).

போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.
இதில் இயந்திர மனிதவியல் என்பது மனிதனின் பௌதீகச் செயற்பாடுகளுக்கு நிகராக கணினிகளைப் பயன்படுத்தி இயந்திர மனிதர்களை உருவாக்கி மனிதனுக்கு பிரதியீடாக நேரடியாக பயன்படுத்தும் தொழில்நுட்பம் ஆகும்.

அடுத்ததாக முகில் கணினியியல் என்பது ஒரு கணினியையோ அல்லது கணினி மென்பொருளையோ பயன்படுத்துவதற்காக இணையத்தின் மூலம் தொலை தூரத்தில் உள்ள கணினி மென்பொருளையோ அல்லது கணினி வன்பொருளையோ பயன்படுத்தும் ஒரு தொழில்நுட்பம் ஆகும்.

இதனால் ஒரு குறிப்பிட்ட மென்பொருள் தேவையை எமது கணினியில் Install செய்யாது தூரத்தில் உள்ள கணினியில் அதனை பயன்படுத்தும் வாய்ப்பை அனைவரும் பெறுவதற்கு ஒரு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதே போல ஒரு கணினியின் தேவையை தொலைவில் உள்ள கணினியைப் பயன்படுத்தி அச்சேவையைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் காணப்படுகின்றது. உதாரணமாக ஒரு செயலாக்கத்தைச் செய்வதற்கு எமக்கு மிகவும் வேகம் கூடிய ஒரு கணினி தேவைப்படுத்துமிடத்து, அந்தக் கணினியை நாம் கொள்வனவு செய்யாது இணையத்தில் மூலமாக அக்கணினியின் சேவையை நாம் வீட்டிலிருந்தவாறே பெற்றுக் கொள்ள முடியும். இந்த தொழிற்பாடானது எதிர்காலத்தில் நாம் வெறும் செலவு குறைந்த கணினிகளை எமது பயன்பாட்டில் வைத்துக்கொண்டு அதற்குத் தேவையான மென்பொருட்களையோ அல்லது ஒரு வன்பொருட்களையோ சேவையாக தொலைவிலிருந்து பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை உருவாக்குகின்றது. தற்பொழுது smart mobile phoneகளைப் பயன்படுத்தி பல்வேறுபட்ட சேவைகளை தொலைதூரத்தில் செயலாக்கத்திற்கு உட்படுத்தி எமது கணினியில், smart mobile phoneஇல் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது. உதாரணமாக PDF fileகளை word file ஆக மாற்றீடு(convert) செய்வதற்கு முகில் கணினியியல் சேவைகள் மூலம் அதைத் தூர இடத்தில் உள்ள ஒரு கணினியில் செயலாக்கத்திற்கு உட்படுத்தி அவ் PDF fileகளை word file ஆக மாற்றீடு செய்யும் வாய்ப்பை தற்பொழுது உள்ள smart mobile phone போன்ற Deviceகளில் பயன்படுத்த முடியும்.

அடுத்ததாக குவாண்டம் கணினியல், இதன் வேகத்தைக் குறிப்பிட வேண்டுமாயின் சுமார் ஒரு Super Computer ஆல் 10,000 ஆண்டுகளுக்கு செயலாக்கம் செய்து பெறும் முடிவை இக்கணினி வெறும் 4 நிமிடங்களில் செய்து முடிக்கும். இவ்வாறான பல்வேறு தொழில்நுட்பங்கள் அறிமுகமாகிக் கொண்டு இருக்கின்றன. அந்த வகையிலே செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) முக்கிய பங்கை வகிக்கின்றது.

மனிதனின் மூளை போல ஒரு கணினியைச் செயற்பட வைக்கும் ஒரு முயற்சி தான் செயற்கை நுண்ணறிவு. இது தற்காலத்தில் பல்வேறு துறைகளிலே மனிதனுக்கு ஈடாகத் தொழிற்படத்தக்க கணினிகள் உருவாக்கம் பெற்று வருகின்றன. உதாரணமாக எம்மோடு அளவளாவுவது, நாம் கேட்கும் கேள்விகளுக்கு விடை அளிப்பது, எம்மோடு எமக்கு நிகராக விளையாட்டுக்களில் பங்கேற்பது, சில விடயங்களில் எமக்கு அடையாளப்படுத்தல்களை மேற்கொள்வது, பாரிய அளவான தரவுகளைச் செயலாக்கம் செய்து அது தொடர்பான அறிக்கையிடுதல்களை மேற்கொள்வது என பல்வேறுபட்ட, மனிதனால் செய்ய வேண்டிய செயற்பாடுகளை கணினி மனித அறிவிற்கு நிகராகச் செயற்பாடுகளில் பங்கேற்கின்றது.

அந்த வகையிலே இயந்திரக்கற்றல்(Machine Learning) என்னும் செயல்பாடு முன்னணி வகிக்கின்றது. அதாவது செயற்கை நுண்ணறிவில் ஓர் உபபிரிவாக இப்பொழுது இயந்திரக்கற்றல் என்னும் நுட்பம் உருவாகிவருகின்றது. இயந்திரக்கற்றல் என்றால் என்ன? நாம் ஒரு சிறு குழந்தைக்கு தொடர்ச்சியா அறிவுட்டலைச் செய்வதன் மூலம் அக்குழந்தையை எதிர்காலத்தில் அவ்வாறான பிரச்சனைகள் ஏற்படும் பொழுது தானாகவே அக்குழந்தை அவ் பிரச்சனைகளை தீர்க்கும் ஆற்றலை வழங்குகின்றோம். இதே போல கணினி ஒன்றிற்கு தொடர்ச்சியா்க பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் எவ்வாறு தொழிற்பட வேண்டும் என்னும் தரவுகளை தொடர்ச்சியாக கணினி கற்றுக் கொண்டே இருக்கும். இதன் மூலம் அக்கணினி ஒரு மிகவும் அனுபவம் பெற்ற கணினியாக மாறும். இது எதிர்காலத்தில் எடுக்கும் தீர்மானங்கள் மிக்க அனுபவம் பெற்றவர் எடுக்கும் தீர்மானங்களை விடவும் சிறப்பான தீர்மானங்களாகக் காணப்படும். காரணம், ஒரு நிபுணர் தனது அறிவை ஒரு குறுகிய காலத்திற்குத்தான் பெற்றுக் கொள்ள முடியும். அவரின் வாழ்நாள் காலம் அதை வரையறுகிறது ஆனால் இந்த இயந்திரக்கற்றல் மூலம் இயந்திரம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுக்குரிய தகவல்களைத் தன்னுள் உள்ளகப்படுத்தும் ஆற்றலைப் பெறுகின்றது. அதனால் எடுக்கப்படும் முடிவு ஆற்றல் மிகுந்த முடிவாகக் காணப்படும். இந்த இயந்திரக்கற்றலில் முடிவுகளுக்கான வழிகாட்டல்கள் மனிதனால் உருவாக்கப்படுகின்றது. இதற்கு அடுத்தபடியாக ஆழக்கற்றல் (Deep Learning)

என்னும் ஒரு துறையும் இன்று வளர்ந்து வருகின்றது. இது கணினியே தன்னியக்கமாக இந்த தகவல்களைப் பெற்று அதைக் கொத்தணிகளாகவோ(Cluster) அல்லது வகைகளாகவோ வகைப்படுத்தி ஒரு தன்னியக்க முடிவை உருவாக்க வல்லதாகக் காணப்படுகின்றது. இந்த வளர்ச்சிகள் ஒரு காலத்தில் மனிதனை விட சிறப்பான பல்வேறு முடிவுகளையும், சிறப்பான பல்வேறு செயற்பாடுகளையும் வழங்க வல்லவையாக கணினிகள அமைய வழி வகுக்கும்.

இயந்திரக் கற்றலாக இருக்கலாம், ஆழமான கற்றலாக இருக்கலாம் இவற்றில் பயன்படுத்தப்படுவது மனித நரம்பியலை(Neural Network) அடிப்படையாகக் கொண்டு கணினியில் இந்த மனித நரம்பியலை பிரதி ஆக்கம் செய்யும் ஒரு அமைப்பு தான் Neural Network இதைப் பயன்படுத்தி இந்த செயற்கை அறிவூட்டல் நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்கிறோம். குறிப்பாக ஆழமான கற்றல் நடவடிக்கைகளிலே பல்வேறுபட்ட படைகளைக் கொண்ட (Layered Neural Networks) பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படுகின்றது. இதுவே முடிவுகளை வகைப்படுத்தல்களுக்கு உட்படுத்தி சுயமான எதிர்வு கூறல்களை செய்யும் ஆற்றல்களை இயந்திரங்களுக்கு வழங்குகின்றது.

கணினி செயற்கை நுண்ணறிவு தொடர்பான நன்மை தீமைகளைப் பற்றி பார்ப்போம். பல்வேறுபட்ட நன்மைகள் இதனால் ஏற்பட உள்ளன. உதாரணமாக ஒரு சத்திர சிகிச்சை நிபுணருக்கு ஈடான சிந்தனையுடன் தொழிற்படத்தக்க கணினிகள் எதிர்காலத்தில் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. மாணவர்களுக்கு கல்வியை கற்பிக்கத்தக்க ஆசிரியர்களாக இந்த செயற்கை நுண்ணறிவு இயந்திரங்கள் தொழிற்படக் கூடியதாக எதிர்காலத்தில் வரவுள்ளன. இவைகள் ஒரு சாதாரண ஆசிரியரைவிட மிகவும் அறிவுவாய்ந்ததாகக் காணப்படும்.

இவ்வாறாக எல்லாத்துறைகளிலும் மனிதனின் தொழிற்பாட்டிற்கு இணையான அறிவுபூர்வமான செயற்பாடுகளை இந்தக் கணினிகள் மேற்கொள்ள உள்ளது. இது வேலைவாய்ப்பு தொடர்பாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

நிபுணர்களின் தேவைகள் குறைவடையலாம், பல்வேறுபட்ட நிபுணத்துவத் தொழில்களிற்கான வேலை வாய்ப்புக்கள் ஒப்பீட்டளவில் குறைவதற்கு வாய்ப்புக் காணப்படுகிறது.

பிரயோகங்கள் என பார்க்கும் பொழுது, குறிப்பாக அமேசன் அலாஸ்கா(Amazon Alexa) என சொல்வோம். இது ஒரு தனிப்பட்ட உதவியாளர் (Personal Assistant) போல சில செயற்பாடுகளை எங்களுக்கு வழங்கும். இந்த அலாஸ்கா கருவியைப் பயன்படுத்தி வீட்டில் உள்ள smart உபகரணங்களை மின்குமிழ், தொலைக்காட்சி, AC போன்றவற்றை on செய்வது Off செய்வது, பிடித்தமான பாடலைக் கேட்பது, எமக்கு தேவையான கேள்விகளுக்கு பதில்களை பெற்றுக் கொள்வது போன்ற செயற்பாடுகளை வெறும் வாய் மூலமாக கட்டளைகளையிடுவதன் மூலம் உதவிகளை பெற்றுக்கொள்ளமுடியும். இதில் ஆப்பிள் நிறுவனத்தின் Siri என்னும் Personal Assistant காணப்படுகின்றது.

இதைவிட பல்வேறுபட்ட AI உருவாக்கங்கள் காணப்படுகின்றன. அந்த வகையிலே தற்காலத்தில் 2022 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட Chat GPT எனப்படும் ஒரு இணைய AI சேவை. மூலம் நாம் எமக்கு தேவையான பல்வேறுபட்ட ஆவண ஆக்கங்கள், கேள்விகளுக்கான பதில்கள், கேள்விகள், வரைவிலக்கணங்கள் இவற்றை இலக்குவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. இதே போல Google நிறுவனமும் தனது AI தொடர்பான வெளியீடாக Bard என்னும் இணைய AI சேவை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதனுடன் அளவளாவி பார்க்கும் வாய்ப்பு உள்ளது. பல்வேறுபட்ட கேள்விகளைக் கேட்டால் அவற்றுக்கான சரியான விடைகளை இது வழங்கவல்லதாக காணப்படுகின்றது.

ஆகவே இந்த AI எங்களின் எதிர்காலத்தில் எமது அன்றாட செயல்பாடுகளில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்த உள்ளது.



# நிகழ்வுகளின் தொகுப்பு

## நூற்றாண்டு நிகழ்வுகள் 09.08.2023



















இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஊடகக்கழகத்தினால் 01.09.2023 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது